[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோருதல்.

(அ) வினா நேரத்தில் அதிக வினாக்கள் எடுத்துக் கொள்ளப்படுதல்.

திரு. கரு. சீமைச்சாமி : கேள்வி நேரம் கால் மணி நேரத்தில் முடிந்து விட்டது. நல்ல பல கேள்விகள், முக்கியமான கேள்விகள், அன்றாடம் பிரச்னையில் உள்ள கேள்விகள் நூற்றுக் கணக்கில் இருந்தும், இந்த மாதிரிக் கேள்விகள்தான் வருகின்றன. ஆகவே நல்ல கேள்விகள், சட்டசபைக்குரிய கேள்விகள் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். ரூல் 41-ன்கீழ் நோட்டீஸ் இருபது நாட்களுக்கு முன்னால் கொடுத்தும் பதில் வரவில்லை. அதற்கும் சபாநாயகர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. விநாயகம் : எந்தெந்தக் கேள்விகள் இப்போது வருகின்றனவோ அதே கேள்விகளைப் பொறுத்து நானும் கேள்விகள் போட்டிருக்கிறேன். துரதிருஷ்டவசமாக என் பெயர் மட்டும் வருவதில்லை. மற்ற நண்பர்களுடைய பெயர்கள் வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்று வந்த வினாக்களில் இரண்டு, திரு. விநாயகத்தினுடையவை.

திரு. கே. விநாயகம் : இன்று ஒன்றுமே வரவில்லை. என் கேள்விகள் மட்டும் ஆயிரம் இருக்கின்றன. அவற்றிற்குப் பதில்களும் வந்திருக்கின்றன. அவற்றிற்கு எல்லாம் கொஞ்சம் இடம் கொடுத்து அவற்றைக் கூடிய சீக்கிரம் வைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இன்று பத்து கேள்விகள் உள்ளன. இதற்குமுன் உள்ள சட்டமன்றக் கூட்டத் தொடரில் இருபது கேள்விகள்கூட வந்திருக்கின்றன. ஆகவே, கேள்விகளையாவது தாங்கள் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இருபது கேள்விகள் அல்ல, ஐம்பது கேள்விகள்கூட வந்திருக்கின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் நிறைய துணை வினாக்கள் கேட்கிற வழக்கத்தைப் பிற்காலத்தில் மேற்கொண்ட காரணத்தினால் இந்தளவு எடுத்துக்கொள்ளப்பட்டது. நேற்று ஒரு வினாவிற்கு இருபது நிமிடங்கள் எடுத்துக்கொண்டும் கூட, மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் அவர்களுக்குத் திருப்தியாக இல்லை. அப்படிச் சில வினாக்களுக்கு நிறைய துணை வினாக்கள் போடக்கூடிய ஆர்வம் உறுப்பினர்களுக்கு இருக்கின்ற காரணத்தினால் அதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய வகையில் வினாக்களின் எண்ணிக்கையைக் குறைவுபடுத்தியிருக்கிறோம். வந்திருக்க வேண்டிய அமைச்சர்கள் வந்திருப்பார்களானால் மற்ற வினாக்களை எடுத்துக்கொண்டிருக்கலாம். ஆனால், அவர்கள் வர முடியாத காரணத்தினால் இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

1969 சனவரி 29] **[பேரவைத் துணைத் தலைவர்]**

தக்கபடி வினுக்கள் போட்டுக் கூடியவரையில் இந்த ஒரு மணி நேரத்தை எப்படியும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : இந்த இரண்டு ஆண்டுக் காலமாக என்னுடைய கேள்வி ஒன்றுகூட வரவில்லை. நான் கேள்வி கொடுக்கும்போது ஒவ்வொரு தடவையும் புதுப்பிக்கலாம், புதுப்பிக்கலாம் என்று வருகிறதே தவிர, என் கேள்வி ஒன்றும் வரவில்லை. இன்றியமையாதவற்றிற்கு அதற்கப்புறம் பதில் சொன்னுல் பயன் இல்லை. இந்த ஆபத்தையாவது தவிர்த்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விகள் வந்து சட்டப்பேரவைத் துறையில் அனுமதிக்கப்பட்டு, மற்றத் துறைகளுக்கு அனுப்பி, அதற்கான விடைகளைப் பெறவேண்டியிருக்கிறது. அந்தத் துறைகளிலிருந்து நமக்குப் பதில்கள் வந்த பிறகு அந்தக் கேள்விகளை அவைக்குக் கொண்டு வருகிறோம். அதில் கால தாமதம் ஆகிறது. அந்தக் காலதாமதத்தை எந்தளவிற்குக் குறைக்க முடியுமோ, அந்தளவிற்குக் குறைப்பதற்கான முயற்சியை நானும் அவை முன்னவர் அவர்களும் எடுத்துக்கொள்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் உறுதி கூறுகிறேன்.

அடுத்து, 'காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ்.' அவற்றைக் கொண்டு வரவேண்டிய இரண்டு உறுப்பினர்களும் இங்கு இல்லாத காரணத்தினுல் அவற்றைத் தள்ளிவைக்க வேண்டியிருக்கிறது.

3. அமைச்சர் அறிக்கை.

துணை வினுவிற்கு அளிக்கப்பட்ட விடைக்குத் திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 31-8-1968-ம் நாளன்று திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் கேட்ட வினு எண் 214-க்கு விடையளிக்கப்பட்டதையொட்டி, திரு. நா. காசிராமன் அவர்களால் எழுப்பப்பட்ட துணை வினுவிற்கு அளிக்கப்பட்ட விடையைச் சரிசெய்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், அறிக்கை ஒன்றை அளிப்பார்.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : தலைவர் அவர்களே, 31-8-1968 அன்று சட்டப் பேரவையில் சென்னை மாநகராட்சி மன்றத்தின் ஆளுகையிலிருந்து அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நகரச் சாலைகளின் பராமரிப்புக் குறித்து, திரு. கோமதி சங்கர தீட்சிதர், எம்.எல்.ஏ., அவர்களின் வினுவின் மேல் திரு. காசிராமன், எம்.எல்.ஏ., அவர்கள் எழுப்பிய துணை வினுவுக்குப் பதிலளிக்கையில் கடற்கரைச் சாலை வடக்கே சுங்க இலாகா அலுவலகத்திலிருந்து அரசினரால் பராமரிக்கப்படுகிறது என்றும், மெரினு கடற்கரைச் சாலை அரசினர் பராமரிப்பில் இருக்கிறதெனவும், பொதுப்பணித் துறை அலுவலகங்களுக்கு எதிரே மேற்படி சாலையில் அங்கத்தினர் (திரு. காசிராமன், எம்.எல்.ஏ.,) சுட்டிக்காட்டிய குறைபாடுகள் கவனிக்கப்படும் என்றும்